இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## பெரு நகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA)

# முன்மொழிவுக் கோரிக்கைகள்

## பத்தரமுல்ல தியத்த உயனவில் ‘பசுமை பாதைக்கான’ முன்மொழிவுக் கோரிக்கைகள்




### திட்டத்துக்கான பெயர்

பத்தரமுல்ல தியத்த 'பசுமை பாதை' (தியவன்ன நீர்நிலைக்கு முன்பாக)

### அறிமுகம்

பத்தரமுல்ல, தியத்த உயன நீர்நிலைகளுக்குச் சமீபமாக பசுமை வினோதப் பூங்காவொன்றினை நிறுவுவதற்குப் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை அழைப்பு விடுக்கின்றது. இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளும் செயற்பாடுகளும் இங்கு நிலவும் பசுமையான சூழலுக்கு இணக்கமானவையாக இருக்க வேண்டும் என்பதோடு, இவ்விடத்தை மக்கள் கண்டுகளிக்கக் கூடியவகையில் கவர்ச்சிகரமானதாகவும் ஆக்க வேண்டும்.

### எண்ணக்கரு

தியத்த உயனவின் பசுமை கட்டமைப்பின் தரம், அணுக்கம் என்பனவற்றின் மூலம், பொதுமக்களின் சந்தோசம் மற்றும் ஆரோக்கியம் என்பனவற்றுக்கான உணர்வுகளை மேம்படுத்தலும் அபிவிருத்திப் பணிகள் மூலம் சுற்றுச் சூழலின் உணர் திறனை மேம்படுத்தலும்




மேலே காட்டப்பட்டவையனைத்தும் விளக்கத்துக்காக உபயோகிக்கப்படும் படங்களே. உண்மையான படங்கள் வேறுபட்டவையாக இருக்கலாம்.

| வலய இலக்கம் | விஸ்தீரணம் | விஸ்தீரணம்: திட்ட இலக்கம் | பிரிவு இலக்கம் | பிரிவின் விஸ்தீரணம் A | R | P | அடிப்படைப் பெறுமதி (ரூபாய் மில்லியன்) | மீளப் பெறமுடியாத கட்டணம் (ரு) | பிணைப்பாதுகாப்புப் பணம் (ரு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | டிஸ்னிலாந்து | 3420 | A | 4 | 0 | 16.86 | 28 | 12,500.00 | 280,000.00 |
| 02 | பொதுமக்களுக்கான விளையாட்டு வலயங்கள் | 3425 | A | 10 | 2 | 2.00 | 69 | 12,500.00 | 690,000.00 |
| | | 3427 | A | 1 | 2 | 35.12 | 11 | 12,500.00 | 110,000.00 |
| 03 | பல் செயற்பாட்டு வலயங்கள் | 3423 | A | 8 | 0 | 5.26 | 66 | 12,500.00 | 450,000.00 |
| 04 | வினோத வலயங்கள் | 3424 | A | 5 | 1 | 15.40 | 45 | 12,500.00 | 660,000.00 |
| | | 3426 | A | 2 | 2 | 6.80 | 16 | 12,500.00 | 160,000.00 |
| 05 | வாகன நிறுத்தும் இடங்கள் (வாடகை) | 3422 | A | 4 | 2 | 10.35 | 58 | 12,500.00 | 580,000.00 |
| 06 | சேவை வலயங்கள், துணைச் செயற்பாடுகளுடன் | வலயத் திட்டமிடல்களுக்கமைய ஒவ்வொரு வலயத்துக்குமான துணைச் செயற்பாடுகளைக் கொண்ட சேவைப் பகுதி | | | | | | | |

### உத்தேச காணி விபரங்கள்

- அடையாளம் காணப்பட்ட 06 வலயங்களுக்கும் அவற்றுக்கு தனியான முன்மொழிவுக் கோரிக்கைகள் தேவைப்படுகின்றன. விருப்பம் கொண்ட கேள்விதாரர்கள், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுக் கோரிக்கை ஆவணங்களை, பத்தரமுல்ல "செத்சிரிபாய, கட்டம் 1" 7 ஆம் மாடியிலுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் பிரிவில் இருந்து 2017 மே மாதம் 22 ஆம் திகதி முதல் 2017 ஜூன் மாதம் 12 ஆம் திகதிவரையான வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 1500 மணி வரை, ஒவ்வோர் வலயத்துக்கும் வரி உள்ளடங்கலாக மீளப்பெறமுடியாத கட்டணமான இலங்கை ரூபாய் பன்னிரண்டாயிரத்து ஐந்நூறினை (12,500/-)செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
- காணியின் அடிப்படை பெறுமதியின் 1% பிணைப் பாதுகாப்புப் பணமாக காசாகவோ அல்லது, இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றில் இருந்து பெறப்பட்ட தேவைக்கேற்ப காசாக்கப்படக்கூடிய, நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவரின் பெயரில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதமாகவோ, முன்மொழிவுக் கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விலை முறிக்கள் மூடப்படும் தினத்தின் பின்னரான 210 நாட்களுக்கு செல்லுபடியானதாக இப்பிணைப்பாதுகாப்புப் பணம் இருத்தல் வேண்டும்.

முன்மொழிவுக் கோரிக்கை ஆவணங்கள் தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வருமான விலைமனுக்கோரல் சபை(பிரதானம்) எனும் பெயருக்கு பதிவுத் தபாலில் இடப்பட வேண்டும்.
அல்லது பத்தரமுல்ல "செத்சிரிபாய, கட்டம் 1" 7 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் பிரிவில் உள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் 2017 ஜூலை மாதம் 04 ஆம் திகதிக்கு முன்னதாக இடப்பட வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேல்மூலையில் பத்தரமுல்ல தியத்த உயனவில் 'பசுமை பாதைக்கான 'முன்மொழிவுக் கோரிக்கை- வலய இலக்கம்......" என தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
இதுகுறித்த மேலதிக விபரங்கள், பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடம் (ஆலோசனை), நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆலோசனைப் பிரிவு, "செத்சிரிபாய, கட்டம் 1" 7 ஆம் மாடி, பத்தரமுல்ல இடமிருந்து பெறப்படலாம். தொடர்பு இலக்கங்கள்: +94 11 286 23 42 அல்லது +94 11 2875916- 20 நீடிப்பு
விலைமனுக்கள் 2017 ஜூலை மாதம் 04 ஆம் திகதி 2.00 மணிக்கு மூடப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் பிரிவில், விலைமனுக்கள் மூடப்பட்டவுடனேயே கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். ஒவ்வோர் வலயத்துக்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

**தலைவர்**
**வருமான விலைமனுக்கோரல் சபை(பிரதான),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை**
**6 ஆம் மாடி, செத்சிரிபாய, கட்டம் 1, பத்தரமுல்ல**